**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 1, நாகப்பட்டினம்**

முன்னிலை. திரு. ஜெ. ஆன்ஸ் ராஜா, பி.ஏ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், திருக்குவளை.

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, நாகப்பட்டினம்(மு.கூ.பொ.)

2026 ம் ஆண்டு ஜூலை மாதம் 06 ம் நாள், திங்கள் கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.153/2026**

**CNR No: TNNG02-000353-2026**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்றத்தின் குற்ற எண் (Name of the Police Station and Crime Number of offence) | நாகப்பட்டினம் நகர காவல் நிலையம், குற்ற எண். 80/2025 |
| 2. | எதிரியின் பெயர் (Name) | பானு வயது 70/25<br>க.பெ. முருகன் ,<br>கொடிமரத்து சந்து,<br>மருந்து கொத்தள ரோடு, நாகப்பட்டினம். |
| 3. | எதிரியின் தந்தை (Father's Name) | |
| 4. | எதிரியின் தொழில் (Occupation) | |
| 5. | எதிரியின் முகவரி (Residence) | |
| 6. | எதிரியின் வயது (Age) | |
| 7. | குற்ற நிகழ்வு நாள் (Date of Occurrence) | 16.02.2025 |
| 8. | புகார் தேதி (Complaint date) | 16.02.2025 |
| 9. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் (Apprehension date) | 16.02.2025 |
| 10. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் (Release on bail) | 05.03.2025 |
| 11. | Commitment | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:30:22 +0530

| | | |
|---|---|---|
| 12. | விசாரணை ஆரம்பிக்கப்பட்ட தேதி (Commencement of trial) | 08.06.2026 |
| 13. | விசாரணை முடிக்கப்பட்ட தேதி (Closure of trial) | 08.06.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு (Sentence of Order) | 06.07.2026 |
| 15. | தீர்ப்பின் நகல் வழங்குதல் அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் குறித்த முடிவு(Service of copy Judgment of finding on Accused) | எதிரிக்கு எதிரான பிரிவு 4(1)(aaa) TNP Act-ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதால், எதிரியை குற்றவாளி என இந்நீதிமன்றம் முடிவு செய்தும், எதிரியை பிரிவு 271(2) BNSS-ன் கீழ் குற்றவாளி என இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேற்படி எதிரி மீதான குற்றச்சாட்டிற்கு ஒரு வருட மெய்க்காவல் சிறைத்தண்டனையும் அபராதத் தொகையாக ரூ.50,000/-மும் விதித்தும், அபராதத்தை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்து பிரிவு 271(2) BNSS- ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது.<br><br>எதிரி மேற்படி விசாரணை காலத்தில் சிறையில் இருந்த (16.02.2025 to 05.03.2025) 18 நாட்களை அவர்களது தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள பிரிவு 468 BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:30:30 +0530

| | | |
|---|---|---|
| | | ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகின்றது. மேலும் இவ்வழக்கில் சான்று பொருளாக தாக்கல் செய்யப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500 ML வீதம் SHO சீல் வைத்தள்ள சாராயத்தினை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. (CP. No.157/2025) இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜராகாத காரணத்தினால் பிணையில் வெளிவர இயலாத பிடி ஆணையானது பிறப்பிக்க உத்தரவிடப்படுகிறது. |
| 16. | காலதாமதத்திற்கான காரணம் (Explanation of Delay) | Nil |
| 17. | பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் எதிரியை விசாரணை செய்த நாள் (Date of examination of accused U/s.351(1)(b) BNSS) | 23.06.2026 |
| 18. | எதிரி தலைமறைவான விபரம் (Details of abscondence of accused) | Nil |

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:30:39 +0530

| | | |
|---|---|---|
| 19. | எதிரியின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் (Date of Examination in chief and cross examination of witnesses) | Witnesses / Chief / Cross<br>PW1 / 08.06.2026 / Nil<br>PW2 / 08.06.2026 / Nil |
| 20 | கோப்பிற்கு எடுக்கப்பட்ட பல்வகை மனுக்கள் (Filing of miscellaneous petitions) | Nil |
| 21. | கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் (Date of filing of final report) | 17.02.2026 |
| 22 | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த விபரம் (Period of Remand of Accused) | 16.02.2025-05.03.2025 (18 நாட்கள்) |
| 23 | மேலமை நீதிமன்றத்தால் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட விபரம் (Grant of stay by superior Courts and the results thereof; and) | Nil |
| 24 | பாதிக்கப்பட்ட நபருக்கான இழப்பீடு உத்தரவு விபரம் (Details of Victim compensation order) | Nil |

இவ்வழக்கு 17.02.2026 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, 06.07.2026 ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை எண்.1 அவர்கள் முன்னிலையாகியும், எதிரியின் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆர். சிவக்குமார்,B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எடுத்துரைத்த வாதம் மற்றும்

JAYANDRAN ANNSRAJA

Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:30:49 +0530

ஆவண சாட்சியங்களை பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

1. கடந்த 16.02.2025 ஆம் தேதி பகல் 01.00 மணியளவில் இவ்வழக்கின் எதிரியானவர் நாகபட்டினம் அக்கரைப்பேட்டை பாலத்தடி கீழ் சுமார் 110 லிட்டர் சாராயத்தை எந்தவித அரசு அனுமதியோ உரிமமோ இல்லாமல் வைத்திருந்து குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி பிரிவு 4(1)(aaa) TNP Act-ன் படி தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக காவல் ஆய்வாளர், நாகப்பட்டினம் நகர காவல் நிலையம் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையானதும் அரசு தரப்பில் எதிரிக்கு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS பிரிவு 230-வின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின், அரசு தரப்பு வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து, எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு விளக்கி வினவ, பொய் வழக்கு என்றும், தான் குற்றவாளி இல்லை என்றும் மறுத்துரைத்தார். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டு அரசு தரப்பில் 1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, 1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் யாதொரு சாட்சியும் விசா ரிக்கப்படவில்லை.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:30:57 +0530

**4(1). அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

அ.சா.1 – ராதிகா பெண் தலைமைக் காவலர் தனது சாட்சியத்தில் கடந்த 16.02.2025 ம் தேதி பகல் 01.00 மணிக்கு தானும், தன்னுடன் பணிபுரியும் தலைமை காவலர் சங்கீதா என்பவரும் நாகப்பட்டினம் காவல் சரகம் அக்கரைப்பேட்டை பாலத்தடியின் கீழ் மது விலக்கு சம்பந்தமாக கண்காணித்து கொண்டிருந்தபோது அங்கு ஒருவர் சந்தேகத்திற்கிடமாக நின்று கொண்டிருந்தவர் போலீசாரைக் கண்டதும் மறைந்து கொள்ள எத்தனித்தவரை பிடித்து விசாரிக்க தனது பெயர் பானு என கூறியதாகவும் அவர் நின்றிருந்த இடத்தை சோதனை செய்த போது அங்கு சுமார் 60 லிட்டர் பிடிக்க கூடிய இரண்டு பாலிதீன் பைகளில் தலா 55 லிட்டர் வீதம் சுமார் 110 லிட்டர் பாண்டி சாராயம் வைத்திருந்ததகாவும், பின் எதிரியை விசாரிக்க தன்னிடம் எவ்வித அரசு உரிமமோ, அனுமதியோ இல்லை என்று கூறியவரை அந்த சாராயத்தை தொட்டு நுகர்ந்து பார்க்கையில் ஒருவித அரிப்பும் கொடிய வாசமும் வீசியது என்றும், அந்த விஷ தன்மையுள்ள சாராயத்தினை மனிதர்கள் குடித்தால் கேடுவிளைவிக்கும் என்பதால் விஷ சாராயம் வைத்திருந்த குற்றத்திற்காக எதிரியை பகல் 01.05 மணிக்கு கைது செய்தும், 01.15 மணிக்கு தன் மற்றும் சங்கீதா - தலைமை காவலர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக பாண்டி சாராயத்தை கைப்பற்றியுள்ளதாகவும், பின்னர் சுமார் 110 லிட்டர் பாண்டி சாராயத்திலிருந்து மாதிரிக்கு சுமார் 750 மி.லி பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:08 +0530

பாட்டில்களில் தலா 500 மி.லி வீதம் சாராயத்தை எடுத்தும் அதில் SHO சீல் வைத்தும், எஞ்சிய தடயத்தை அழித்தல் மகஜர் வாயிலாக சாராயத்தை அழித்ததாகவும், பின்னர் காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக முதல்தகவலறிக்கை தாக்கல் செய்ததாகவும் குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 ன் மூலமாக கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழிப்பு மகஜரில் உள்ள அ.சா.1-ன் 1வது சாட்சி கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.1 மற்றும் அ.சா.ஆ.2-ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. இவ்வழக்கின் புலனாய்வு அதிகாரிக்கு பதிலாக கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட அ.சா.2 – தனபால் நாகப்பட்டினம் நகர காவல் உதவி ஆய்வாளர் வழக்காவணங்களின் அடிப்படையில் அ.சா.1-யை ஒத்து சாட்சியளித்துள்ளார். அ.சா.2 ன் மூலமாக கைப்பற்றுதல் மகசர், அழிப்பு மகசர், முதல் தகவல் அறிக்கை, படிவம் எண்.91 மற்றும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஆகியவை முறையே அ.சா.ஆ.3 முதல் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து பிரிவு 351(1)(ஆ) BNSS -ன் கீழ் கேள்வி எழுப்ப பொய் சாட்சி என்றும், வழக்கு குறித்து கேள்வி எழுப்ப பொய் வழக்கு என்றும் மறுத்துரைத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என கூறப்பட்டு, சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:21 +0530

7. எனவே, எதிரிக்கு எதிராக சாட்டப்பட்ட குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகங்களுக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும் சான்றாவணங்களும் பரிசீலிக்கப்பட்டது.

9. அ.சா.1 சாட்சியத்தை பரிசீலனை செய்த போது அசா.1ம் பட்டியல் சாட்சி 2 ஆன சங்கீதாவும் மற்றும் உதவி ஆய்வாளர் விவேக் ரவிராஜ் என்பவரும் கடந்த 16.02.2025ம் தேதி பகல் 01.00 மணியளவில் நாகப்பட்டினம் காவல் சரகம் அக்கரைப்பேட்டை பாலத்தடியின் கீழ் மது விலக்கு சம்பந்தமாக ரோந்து சென்றபோது எதிரியானவர் அயல்மாநில பாண்டிசாரயத்தினை 60 லிட்டர் பிடிக்கக்கூடிய இரண்டு பாலித்தீன் பைகளில் 55 லிட்டர் வீதம் 110 லிட்டர் பாண்டி சாராயத்தினை வைத்திருந்தார் என்றும் அதை அ.சா.1, பட்டியல் சாட்சி 2, 3 கைப்பற்றினார்கள் என்றும், கைப்பற்றிய சாராயத்தை முகர்ந்து பார்த்தபோது ஒருவித அரிப்பும், கொடிய வாசமும் இருந்ததாகவும், மேலும் அந்த விஷத்தன்மை உள்ள சாராயத்தினை மனிதர்கள் குடித்தால் கேடுவிளைவிக்கும் என்பதால் அந்த விஷ சாராயத்தினைகைப்பற்றியதாகவும், பின்பு 750 ML பிடிக்கக்கூடிய 2 கண்ணாடி பாட்டில்களில் 500 ML பகுப்பாய்விற்காக சாராயத்தினை எடுத்தும் மிஞ்சிய சாராயத்தினை அழித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ஆனவர் அ.சா.ஆ.3

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:29 +0530

மற்றும் அ.சா.ஆ.4 கைப்பற்றுதல் மகசர் மற்றும் அழித்தல் மகசரில் 1வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என சாட்சியமளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரியான பட்டியல் சாட்சி 3 விசாரணை செய்யப்படவில்லை. அவருக்கு பதிலாக அ.சா.2 கூடுதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டு அவர் ஆவணங்களின் அடிப்படையிலேயே சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 சாட்சியத்தினை பரிசீலனை செய்தபோது பட்டியல் சாட்சி 3 ஆனவர் உதவி ஆய்வாளர் விவேக்ரவிராஜ் அவர்கள் எதிரி மீது அ.சா.ஆ.5 ஆன முதல் தகவலறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதும், பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு 16.02.2025 ம் தேதி அனுப்பியுள்ளார் என்பதும், மேலும் கைப்பற்றிய சாராயத்தினை அ.சா.ஆ.6 படிவம்எண். 95 ன் மூலம் 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500 ML வீதம் உள்ள சாராயத்தினை SHO சீல் வைத்து நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளார் என்பது தெரியவருகிறது. இவ்வழக்கில் விசாரணை செய்யப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 சாட்சியங்களை எதிரிதரப்பால் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை. மேலும் எதிரித்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் பொய்வழக்கு என நிரூபணம் செய்ய எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

11. மேலும், அ.சா.2 பரிசீலனை செய்தபோது பட்டியல் சாட்சி விவேக்ரவிராஜ் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றிய சாராயத்தினை விஷத்தன்மை இல்லாத

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:41 +0530

காரணத்தினால் சட்டப்பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.7 ஆன சட்டப்பிரிவு மாற்றறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதும் தெரியவருகிறது. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம் என்னவென்றால்?

தற்போது ப.சா.3 அவர்கள் பிரிவு 32 தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 படி 13 பிராந்தி பாட்டில்களை அழிக்க தகுதியுடையவரா? ப.சா.3 அவர்கள் Selvi vs. State rep. by Inspector of Police, Rasipuram Police Station, Namakkal District (2011) 3 MLJ(Criminal) 332 என்ற சென்னை உயர்நீதிமன்றம் கீழ்கண்டவாறு விதித்துள்ள விதிமுறைகளை ப.சா.3 பின்பற்றியுள்ளாரா?

> ‘’... 12. A close reading of the above third proviso to Section 32 (c) of the Tamil Nadu Prohibition Act would make it abundantly clear that the officer who has seized the illicit arrack can draw samples only in the presence of a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police and then he can destroy the remaining contraband. In respect of the destruction, the said prohibition officer or police officer, in whose presence the destruction is done, should give a certificate in respect of the total quantity seized, the total quantity taken as samples and total quantity destroyed and such certificate should be forwarded to the Magistrate having jurisdiction. But, in this case, drawing of samples as well as the destruction were not made in the presence of either a prohibition officer or any police officer not below the rank of an Inspector of Police. It may be true that P.W.8 himself is an Inspector of Police but that

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:49 +0530

by itself will not satisfy the requirements of the above provision. Here, we have to look into the object behind the said proviso. In a case where the officer, who seizes illicit arrack, decides to destroy the same after drawing samples, in order to ensure that samples were really taken from the illicit arrack seized and that the rest of the illicit arrack was destroyed, the presence of yet another responsible officer namely, a prohibition officer or any police officer not below the rank of Inspector is insisted upon. This procedure, in my considered opinion, is mandatory as the object behind the same is to ensure that there is no manipulation at the hands of the officer who seizes the illicit arrack ....

... 13. In the instant case, since the said provision has not been followed, in my considered opinion, the evidences of P.W.8 and P.W.4 that illicit arrack was seized, samples were drawn and the rest of the illicit arrack was destroyed cannot be believed.''

பிரிவு 32 தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 படி கீழ்கண்டவாறு கூறுகிறது.

Section 32 - ''Provided also that where any [illicit arrack] is seized under this section by any officer or person, such officer or person may, in the presence of a prohibition Officer or any Police officer not below the rank of Inspector, ----

(i) take two samples of the [illicit arrack] or such quantity and in such manner as may be prescribed, and

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:31:58 +0530

(ii) destroy or cause to be destroyed the [illicit arrack] and send the pots or other receptacles in which the [illicit arrack] was kept together with the samples taken and a certificate from the Officer in whose presence the samples were taken and the [illicit arrack] was destroyed, as to the total quantity of [illicit arrack] seized, the total

quantity taken as samples and the total quantity destroyed, to the Magistrate having jurisdiction to inquiry into the case. ...''

12. பிரிவு 32 தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம் 1937 பரிசீலனை செய்தபோது, கைப்பற்றிய பிராந்தி பாட்டில்களை மதுவிலக்கு அதிகாரிக்கு முன்னிலையில் அல்லது காவல் ஆய்வாளர் முன்னிலையில் தான் அழிக்க முடியும். இவ்வழக்கில் அவ்வாறு எந்த நடைமுறையும் அரசு தரப்பால் பின்பற்றவில்லை என்பது தெரியவருகிறது. ஆனால் பட்டியல் சாட்சி 2 ஆனவர் நாகப்பட்டின நகர காவல் நிலையை உதவி ஆய்வாளர் ஆவார். தமிழ்நாடு மதுவிலக்கு தடுப்புச்சட்டத்தில் உதவி ஆய்வாளருக்கு பிராந்தி பாட்டில்களை அழிப்பதற்கு எந்தவிதமான உரிமையும் கொடுக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது. ஆனாலும், பட்டியல் சாட்சி 3 ஆன உதவி ஆய்வாளர் விவேக் ரவிராஜ் அவர்கள் தீர்ப்புரையில் கூறப்பட்ட நெறிமுறைகளை பின்பற்றாத காரணத்தினால் எதிரியானவர் 110 லிட்டர் சாராயத்தினை 16.02.2025 ம் தேதி காலை 11.00 மணிக்கு அக்கரைப்பேட்டை பாலத்தடியின் கீழ் விற்கவில்லை என்று கருதமுடியாது. எதிரி விற்ற சாராயத்தின்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:32:13 +0530

மாதிரியை தான் அ.சா.ஆ.6 ஆன படிவம் 95 ன் மூலம் அரசுத்தரப்பால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆகவே எதிரிதான் 110 லிட்டர் பாண்டி மாநில சாராயத்தினை விற்றுள்ளார் என்பது அரசுத்தரப்பால் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

13. எதிரி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4(1)(aaa) TNP (Amendment) Act -2024-ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து எதிரியிடம் அவருக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை குறித்து வினவுவதற்காக எதிரியை அழைத்தபோது எதிரி நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. எனவே அவரிடம் மேற்படி தண்டனை குறித்து வினவ இயலவில்லை.

14. **முடிவாக,** எதிரி மீதான 4(1)(aaa) TNP (Amendment) Act -2024 ன் படியான குற்றச்சாட்டிற்கு ஒரு வருட மெய்க்காவல் சிறைத்தண்டனையும் அபராதத் தொகையாக ரூ.50,000/- யும் விதித்தும், அபராதத்தை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறைத்தண்டனை விதித்தும், பிரிவு 271(2) BNSS- ன் கீழ் தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், எதிரி மேற்படி விசாரணை காலத்தில் சிறையில் இருந்த (16.02.2025 to 05.03.2025) 18 நாட்களை அவர்களது தண்டனை காலத்திலிருந்து கழித்துக் கொள்ள பிரிவு 468 BNSS-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் எதிரி மற்றும் எதிரியின் ஜாமின்தாரர்கள் எழுதிக் கொடுத்த பிணை ஆவணங்களை மேல் முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:32:22 +0530

உத்தரவிடப்படுகின்றது. மேலும் இவ்வழக்கில் சான்று பொருளாக தாக்கல் செய்யப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500 ML வீதம் SHO சீல் வைத்தள்ள சாராயத்தினை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. (CP. No.157/2025).

இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜராகாத காரணத்தினால் பிணையில் வெளிவர இயலாத பிடி ஆணையானது பிறப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பிறகு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:32:37 +0530

நீதித்துறை நடுவர் எண்.1
நாகப்பட்டினம் (மு.கூ.பொ)

**இணைப்பு:**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:**

| | |
|---|---|
| அ.சா.1. | திரு. ராதிகா - பெண் தலைமைக் காவலர் |
| அ.சா.2 | திரு. தனபால் - உதவி ஆய்வாளர் (கூடுதல் சாட்சி). |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1. | 16.02.2025 | கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.1 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 16.02.2025 | அழிப்பு மகஜரில் உள்ள அ.சா.1 ன் முதலாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 16.02.2025 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.4 | 16.02.2025 | அழித்தல் மகசர் |
| அ.சா.ஆ.5 | 16.02.2025 | முதல் தகவலறிக்கை |
| அ.சா.ஆ.6 | 12.12.2025 | படிவம் எண்.91 |
| அ.சா.ஆ.7 | 15.12.2025 | சட்டப் பிரிவு மாற்றறிக்கை |

**அரசு தரப்பில் குறியீடுசெய்யப்பட்ட சான்று பொருட்கள்** : இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள் : இல்லை.**

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.07.06 17:32:47 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
நாகப்பட்டினம்.(மு.கூ.பொ)

**நகல் - மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர், நாகப்பட்டினம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.**

1. இந்த தீர்ப்புரையின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

2. இந்த வழக்கில் எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இந்த வழக்கின் எதிரி விசாரணையின் போது பிணையில் இருந்தார்.

4. மேலும் இவ்வழக்கில் சான்று பொருளாக தாக்கல் செய்யப்பட்ட 750 ML பிடிக்கக்கூடிய இரண்டு கண்ணாடி பாட்டில்களில் தலா 500 ML வீதம் SHO சீல் வைத்தள்ள சாராயத்தினை மேல் முறையீட்டு காலத்திற்கு பின் அழிக்க உத்தரவிடப்படுகிறது. (CP. No.157/2025). இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்திற்கு ஆஜராகாத காரணத்தினால் பிணையில் வெளிவர இயலாத பிடி ஆணையானது பிறப்பிக்க உத்தரவிடப்படுகிறது.